

# என்றும் எரிக்க முடியாத மின் அலை நூலகம்...!

## இன்று உலக புத்தக மற்றும் பதிப்புரிமைகள் தினம்

உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினத்தை மையப் படுத்திய சிறப்புப் பார்வை. எனது பார்வையில் நாட்டுப் புத்தகங்களின் மையமான நூலக நிறுவனம் இந்த உலகின் மிகப்பெரிய தலைவர்களையும் அறிஞர் களையும் சிந்தனை யாளர்களையும் ஆராய்ச்சியா ளர்களையும் உருவாக்குவதற்கு அடித்தளமாக காணப்படுகிறது.

புத்தகங்கள் நூலகத்தையும் வீட்டையும் அலங் கரிப்பவையல்ல. மாறாக மனிதனின் அறிவு வளர்ச்சியையும் அவனது புதுமையை நோக்கிய தேடல்களையும் அலங்கரிப்பவை. புத்தகம் என்பது புதிய உலகை படைப்பதற்கு மிகச் சிறந்த ஆயுதம். இவ்வாறு மகிமை பொருந்திய புத்தகங்களை கொண்டாடும் முகமாக 1995 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் சித்திரை மாதம் 23 ஆம் திகதி உலக புத்தக மற்றும் பதிப்புரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஒருவரின் நடத்தையிலும் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்தும் சாதனமாகிய புத்தகங்களைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இவ் வாறான மகத்தான பணியை நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கும் நூலக நிறுவனத்தின் புத்தகங்களைப் பாதுகாக்கும் செயற்பாடு பற்றிய அனுபவப் பகிர்வாக இப்பத்தி அமைகின்றது.

ஒரு நூலகம் திறக்கப்பட்டால் ஒரு சிறைச்சாலை மூடப்படும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நூலக நிறுவனம் இன்று 19 ஆண்டுகள் கடந்து பல்பரிமாணங்களுடன் தனித்துவமாக மிளிர்ந்து நிற்கின்றது. எவ்வித பாகுபாடுமின்றி இலங்கைத் தமிழ் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்கின்றது.

இவற்றை உலகவாழ் சமுதாயத்தினர் அனைவரும் www.noslaham.org என்ற நூலக வலைத்தளத்தில் இலவசமாக பார்த்துப் பயனடைந்து கொள்ள முடியும். இந்தப் பணியைச் செயற்படுத்தும் இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமாக நூலக நிறுவனம் விளங்குகின்றது.

இலங்கைத் தமிழ் சமூகங்களின் அறிவுத் தொகுதி மற்றும் மரபுரிமைக்குள் உள்ளடங்கும் அம்சங்களில் பிரதானமானது நூல்களாகும். ஆரம்ப காலம் தொட்டு தற்காலம் வரைக்கும் இலங்கை தொடர்பாக

எப்பாகத்திலிருந்தும் அச்சில் வெளிவரும் பல் துறைசார்ந்த நூல்கள் அனைத்தையும் மின் அலை வடிவாக்கி, அவற்றை எவரும் எப்போதும் இணையத் தளத்தில் இலகுவாகப் பெற்றுப் படிப்பதற்கு ஏற்ற வண்ணம் வெளியிடும் சேவையை வழங்கி வருகிறது.

அதாவது இலங்கை சார்ந்து எழுதப்பட்ட நூல்கள், இலங்கை எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நூல்கள், இலங்கை பதிப்பாளர்களால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள், இலங்கையிலுள்ள நிறுவனங்களுக்கு ஊடாக வெளியீடு செய்யப்படும் நூல்கள் போன்றவற்றையே நூலக நிறுவனம் தேடிக் கண்டுபிடித்து அழிவடைந்து போகாமல் ஆவணப்படுத்திப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததி பயன்படுத்தும் வகையில் கையளிக்கும் சேவையை வழங்குகின்றது.

இதனாலேயே இலங்கைத் தமிழ் சமூகத்தினுடைய எழுத்தாவணங்களின் உறைவிடமாகவும், ஓர் அறிவுக் களஞ்சியமாகவும் எனது பார்வையில் நூலக நிறுவனம் காட்சியளிக்கின்றது.

நூலக நிறுவனமானது கள ஆய்வாளர்கள், செயற்றிட்ட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஊடாக நூல்களை சேகரிக்கின்றது. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற நூல்கள் இலங்கை தொடர்பானது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் துப்பரவு செய்யப்பட்டு, எண்ணிமப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்படும்.

தொடர்ச்சி▼

# என்றும் எரிக்க முடியாத மின் அலை நூலகம்...!

**தொடர்ச்சி▲**

ஆவணப்படுத்திய அனைத்து நூல்களையும் உடனடியாகப் பதிவேற்றம் செய்வதில்லை. எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்களின் அனுமதியோடுதான் நூலக வலைத்தத்தளத்தில் நூல்களை பதிவேற்றம் செய்து வருகின்றது.

நூல்களை பதிவேற்ற உரிய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்களை தேடிக் கண்டுபிடித்துத் தொடர்பு கொள்வது இலகுவான காரியமன்று. ஆனாலும் இந்த நிறுவனம் சளைக்காது முயற்சியெடுத்து அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றது.

இதுவரைக்கும் (21.04.2024) இந்த நிறுவனமானது 8 ஆயிரத்து 392 ஈழத்து எழுத்தாளர்களின் அனுமதியையும் 6 ஆயிரத்து 742 பதிப்பாளர்களின் அனுமதியையும் பெற்றுக் கொண்டு புத்தகங்கள் நூலக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.

நூலக நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரைக்கும் பல செயற்றிட்டங்கள் ஊடாகப் பல்துறைசார் நூல்களை ஆவணப்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கை தொடர்பாக அச்சில் வெளிவந்த 18ஆயிரத்து 716 புத்தகங்களை கண்டுபிடித்து மின்வடிவில் நூலக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.

பதிவேற்றிய நூல்களைக் காலந்தாழ்த்தாது இலகுவாகத் தேடி வாசிக்கக் கூடிய வசதிகளையும் இந்த நிறுவனம் வாசகர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது. வாசகர்கள் நூலக வலைத்தளம் ஊடாக நூல்களை தேடுகின்ற போது புத்தகத்தினுடைய பெயர், எழுத்தாளர்களின் பெயர், பதிப்பாளர்கள், புத்தகம் வெளியிடப்பட்ட ஆண்டு மற்றும் குறிசொற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தேடி இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணமாக ஹரிஷாந் என்ற எழுத்தாளர் எழுதிய புத்தகத்தை பார்க்க வேண்டுமானால், எழுத்தாளர்களின் பெயரினுடைய முதலெழுத்தை மாத்திரம் அகர வரிசையின் ஒழுங்கு முறைப்படி வடிவமைத்து வைத்திருக்கின்றார்கள்.

அதில் "ஹ" வரிசையில் சென்று இலகுவாக அடையாளம் கண்டு அவர் எழுதிய புத்தகங்களை பார்த்து பதிவிறக்கி வாசிக்க முடியும். அத்தோடு மிக அவசியமான தேவைக்கு ஒரு புத்தகம் தேவைப்பட்டால் எங்கு தேடினாலும் எவ்வளவு பெறுமதியானதாக இருந்தாலும் சிலவேளை கிடைக்காமல் போகலாம். ஆனால் அவ்வாறான மிகப்பெறுமதியான புத்தகங்களை நூலக வலைத்தளத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியை அனைவருக்கும் ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது, விழிப்புலனற்றோருக்காக நூல்களை ஒலிப் பதிவு செய்து ஒலி நூல்களாகவும் வாசகர்களுக்கு வழங்குகின்றது.இவ்வாறாக இந்த நிறுவனத்தின் நூல்களை ஆவணப்படுத்தி பாதுகாக்கும் மகத்தான சேவையை உலகவாழ் சமுதாயத்தினர் பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரது கல்வித் தேவைகளையும் அறிவு விருத்தியையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு இந்த நூல்கள் உறுதுணையாக அமைகின்றது.

நூலகம் வலைத்தளத்தைப் பயன்படுத்துபவர்கள் தமக்கு தேவையான நூல்கள் பற்றி அறிந்து கொள்ளவோ குறிப்பிட்ட தகவல்கள் தேவை போன்ற ஏதாவது உதவிகளுக்கு உசாத்துணைப் பகுதி ஒன்று வடிவமைத்து வைத்துள்ளது. அதற்குள் சென்று குறித்த தேவையை குறிப்பிட்டு மின்னஞ்சல் முகவரியையும் கொடுத்தால் அதற்கான பதிலை நூலக நிறுவனத்தின் பணியாளர்கள் அனுப்புவார்கள்.

ஒவ்வொரு துறை சார்ந்தும் வெளியான எல்லா வெளியீடுகளையும் ஆவணப்படுத்தினால்தான் வாசகர்கள் முழுமையான உச்சப் பயனை அனைவரும் பெற முடியும். இதற்கு எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் இந்த நிறுவனத்தோடு கைகோர்ப்பது மிக அவசியமானதாகும்.

நான் அறிந்தவரையில் சில எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்கள் தங்களது நூல்களை ஆவணப்படுத்திப் பாதுகாப்பதற்காக நூலக நிறுவனத்தை தொடர்பு கொள்வது வரவேற்கத்தக்கது. ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் நூலக நிறுவனத்துடன் இணைந்து தமது நூல்களையும் பதிவேற்ற வேண்டுமென்றால் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள அலுவலகத்திலும் மட்டக்களப்பு அரசடியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்திலும் நேரடியாகச் சென்று தொடர்பு கொள்ளலாம். அல்லது 9421223 1292, 94761625485 எனும் தொலைபேசி எண்களிலும் noslahamfoundation@gmail.com எனும் மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த நிறுவனமானது எழுத்தாவணங்களில் புத்தகத்தை மட்டுமல்ல. ஏனைய எழுத்தாவணங்களான இதழ்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள், சிறப்பிதழ்கள், நினைவு மலர்கள், அறிக்கைகள் என்பன போன்ற அனைத்தையும் சுருக்கமாக கூறினால் இலங்கை தமிழ் சமூகம் தொடர்பான அத்தனை அம்சங்களையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்கும் முக்கிய பணியை மேற்கொண்டு வருகின்றது.

இது சம்மந்தமாக ஆவணப்படுத்த விரும்புபவர்களும் இந்த நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள முடியும்.

அத்தோடு நூலகச் செயற்பாடுகளில் தன்னார்வலர்களாக இணைந்து கொள்ள விரும்புவோரும் நேரிலோ, மின்னஞ்சலூடாகவோ, தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிந்திருக்கின்றேன்.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலக நிறுவனத்தின் வலைத்தளத்தை யாரும் எரித்து விடவோ அழித்துவிடவோ முடியாது என்பதால் காலா காலத்துக்கும் இது பாதுகாப்போடு இருந்து தொடர்ச்சியாகப் பயனளித்துக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இறுதியாக இன்று உலக புத்தக தினத்தைக் கொண்டாடும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள், வாசகர்களுக்கும் முக்கியமாக மிக மகத்தான சேவையாற்றும் நூலக நிறுவனத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ப. ஜோன் டிலக்ஷன்,**
சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை.